குருவிட்ட பிரதேச சபை - 2022

------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

குருவிட்ட பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயமொன்றுக்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை என்னால் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு மறுப்பு அபிப்பிராயமொன்று வெளிப்படுத்தப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடாத்தப்படுகின்ற கணக்காய்வினை அடிப்படையாகக் கொண்டு பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் அறிக்கையினை வழங்குவது எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் 1.6.1 ஆம் பந்தியின் (உ) மற்றும் (ஊ) அவதானிப்புகள் நீங்கலாக முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழிலாளர் ஓய்வு அறையின் கிரயம் ரூபா 637,043 மூலதனம் ஆக்கப்பட்டிராததுடன் 04 அபிவிருத்தி செயற்திட்டங்களின் செலவினம் ரூபாய்.5,541,745 இனால் அதிகரித்து மூலதனமாக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பெறுமதி சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வீத வரி மற்றும் ஏக்கர் வரியின் நிலுவையான மிகை கட்டணங்கள் ரூபாய்.480,548 இனால் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | - மேற்படி- |
| (இ) | தவறுதலாக இரட்டை பதிவு மேற்கொள்ளப்பட்டமையால் தளபாடங்கள் மற்றும் பொறுத்துகள் மற்றும் மூலதன ஈட்டத்திற்கான வருமான பங்களிப்பு கணக்கானது ரூபாய்.92,400 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டது. | எதிர்வரும் வருடத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | - மேற்படி- |
| (ஈ) | கிடைக்கப்பெற்ற ரூபாய்.103,334 தொகையான ஆயுர்வேத மானியங்கள் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தன. | எதிர்வரும் வருடத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | - மேற்படி- |
| (உ) | நிலையான வைப்புக்கள் கணக்கின் மீதி 2020 ஆம் ஆண்டு முதல் ரூபாய்.51,664,000 இனால் குறைத்து முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன் ரூபாய்.57,724,871 இனால் மூலதன மானியங்கள் பெற வேண்டியதாக காணப்படுவதாக அவ்வருடத்திலேயே தவறான பதிவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் 2022 ஆம் ஆண்டின் உள்ளேனும் அந்த தவறினை திருத்தியிராத காரணத்தால் ரூபாய்.109,388,871 தொகையான தீர்க்கப்படாத தொங்கல் மீதியொன்று நிதிக்கூற்றுங்களில் காணப்பட்டது. | எதிர்வரும் வருடத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இது திருத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | நிலையான வைப்புக்கள், மூலதன மானியங்கள், ஊழியர் கடன்கள், தீர்ப்பனவு செய்ய முடியாது காணப்பட்ட முற்பகணக்குகளுக்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ரூபாய்.114,806,153 ஆன செலவு பதிவுகள் மற்றும் ரூபாய்.98,391,679 தொகையான வரவு பதிவுகளும் அந்த பதிவுகளின் எதிர் பதிவுகளாக திரண்ட நிதியத்திற்கு ஈடுபடுத்தப்பட்ட பதிவுகளும் உண்மையான கொடுக்கல் வாங்கல்களின் பிரதிபலனாக மேற்கொள்ளப்பட்ட கணக்கு வைத்தல்களாக காணப்படவில்லை. | எதிர்வரும் வருடத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இது திருத்தப்பட வேண்டும். |
| (எ) | 07 கணக்கு விடயங்களுக்கு உரியதாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க மீதிகள் மற்றும் பயன்பாட்டு ஆவணங்களின் பிரகாரமான மீதிகள் ஆகியவற்றுக்கிடையே ரூபாய்.161,077,208 ஆன வேறுபாடொன்று நிலவியது. | வீத வரி மிகை கட்டணம் கணக்கு வைக்கப்படாமை அவ்வேறுபாட்டிற்கு காரணமாக அமைந்திருந்தமை. | வேறுபாட்டுக்கான காரணங்கள் இனங்காணப்பட்டு தீர்ப்பனவு செய்ய வேண்டும். |

### 1.6.2 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபாய்.214,055 கூட்டுத் தொகையான 03 கணக்கு விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு உரிய விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | விவரங்களை கண்டறிவதற்கு கடினமாக உள்ளமையால் பதிவழிப்பதற்கான அங்கீகாரத்திற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு முன் வைக்கப்பட்டுள்ளமை. | விரிவான உப பதிவேடுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டில் ரூபாய்.575,385,836 கூட்டுப்பெறுமதியுடைய 29 பேரேட்டு பதிவுகள் அங்கீகரிக்கப்பட்டிராததுடன் பேரேட்டு உறுதிச் சீட்டுக்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடத்தில் கணக்குகளை தயாரிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அனைத்து பேரேட்டுப் பதிவுகளும் உரிய முறையில் அங்கீகரிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 371(5) இற்கு முரணாக 2009 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு உரிய ரூபாய்.2,614,981 கூட்டுத் தொகையான முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | முற்பண பதிவேட்டிலிருந்து பதிவழிப்பதற்கு ஆளுநரின் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுரைகளுக்கு முரணாக சபையின் நிர்வாகத் தேவைப்பாடுகள் அல்லாத பயணங்களுக்கு ரூபாய்.53,000 செலவிடப்பட்டிருந்தது. | அந்த செலவினங்களை மீள தீர்ப்பனவு செய்யுமாறு தலைவருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளமை. | அறிவுரைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 63,358,707 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 90,282,746 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடத்திற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 7,428,955 | 8,418,956 | 5,930,941 | 11,262,318 | 6,443,197 | 8,809,052 | 5,732,585 | 8,944,120 |
| வாடகை | 9,096,117 | 9,004,731 | 8,184,746 | 1,905,021 | 8,060,294 | 7,791,836 | 8,510,419 | 1,128,171 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,204,250 | 2,780,474 | 2,780,474 | - | 3,160,450 | 2,179,966 | 2,180,966 | - |
| ஏனைய வருமானங்கள் | 11,288,780 | 17,431,240 | 14,210,857 | 236,468 | 10,770,730 | 36,124,577 | 34,955,353 | 180,619 |
| | 30,018,102 | 37,635,401 | 31,107,018 | 13,403,807 | 28,434,671 | 54,905,431 | 51,379,323 | 10,252,910 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 வருடங்களை விட பழமையான ரூபாய்.825,776 நிலுவை வீத வரி மீதி ஒன்றும் 03 வருடங்களை விட பழமையான ரூபாய்.648,097 நிலுவை ஏக்கர் வரி மீதி ஒன்றும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக காணப்பட்டது. | நடமாடும் சேவைகளின் மூலம் மற்றும் களப் பரிசோதனைகளின் மூலம் நிலுவைகள் அறவிடப்படுவதுடன் ஏக்கர் வரிக்குரிய காணிகளை நிர்ணயித்தல் மற்றும் காணி பிரச்சினைகளை தீர்மானிப்பதற்கு திட்டமிட்டுள்ளமை. | நிலுவை வருமானங்கள் சேகரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 03 வருடங்களுக்கு மேற்பட்ட பழமையான நிலுவை கடை வாடகை ரூபாய்.1,149,850 மற்றும் 24 தொலைபேசி நிலைமாற்றல் கோபுரங்களின் வியாபார வரி ரூபாய்.63,000 அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலுவை வருமானம் சேகரிக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுமார் 10 ஏக்கர்களை சுவீகரிப்பதற்கு சபையினால் 2015 ஆம் ஆண்டில் ரூபாய்.3.5 குறுவிட்ட பிரதேச செயலகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் காணியை சுவீகரிக்க முடியாமையால் திண்ம கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சி திட்டம் ஒன்றினை திட்டமிட்டு நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. | காணிகளை சுவீகரிப்பதற்கான ஆவணங்கள் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு அந் நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு அமைய மீண்டும் மீண்டும் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளமை. | காணிகளை துரிதமாக சுவீகரித்து திண்ம கழிவு முகாமைத்துவ திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 சர்ச்சைக்குரி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு உரித்தற்ற கப் வண்டி ஒன்று 2015 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாத காணப்பட்டு பின்னர் 2022 மே மாதத்தில் அது தீக்கிரையாகி | நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவடையவில்லை. 2018 இன் 34 ஆம் இலக்க இழப்பீடுகளுக்கான அலுவலக அதிகாரச் சட்டத்தின் கீழ் நட்டத்தினை | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அழிவடைந்திருந்தது. இது தொடர்பில் நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நட்டத்தினை பொறுப்பு கூற வேண்டிய நபர்களை நிர்ணயிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. நட்டம் தொடர்பில் நி.பி.104 இன் கீழ் விசாரணைகளை மேற்கொண்டு உள்ளூர் ஆட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |

### 3.3 வாகனப் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டில் அரசிடமிருந்து கிடைத்த பெக்கோ லோடரின் உரித்தினை சுவீகரிப்பதற்கு அல்லது மீள கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 03 சேதமடைந்திருந்த வாகனங்களின் பழுது பார்த்தல் அல்லது கைதவிர்ப்பு பணிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிவுக்கான உரித்திணை சுவீகரித்து இல்லாமை மற்றும் குறித்த வாகனங்களை பழுது பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளவாறு உள்ளமை. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான பொப்கட் இயந்திரம் ஒன்று, கம்பெக்ட்டர் இயந்திரம் ஒன்று மற்றும் மோட்டார் வள்ளம் ஒன்று 07 முதல் 10 வருட காலமாக பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | பொப்கட் இயந்திரம் தேவைக்கேற்ப சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றமை, கம்பெக்டர் இயந்திரத்தினை பழுது பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை மற்றும் மோட்டார் வள்ளத்தின் எஞ்சின் தொடர்பில் காணப்படும் வழக்கு நிறைவடைந்திராமை. | சொத்துக்களை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் வழக்குப் பணிகளுக்காக ரூபாய்.25,000 ஆன மாதாந்த படிக்கு சட்டத்தரணி ஒருவரின் சேவையினை பெற்றுக்கொள்ள 2021 ஜூலை 16 ஆம் திகதி இடம்பெற்ற பொதுச் சபையில் தீர்மானிக்கப்பட்டு அத்திகதி பெறுகை நடைமுறையிலிருந்து விலகி சட்டத்தரணியுடன் | பெருமளவான பணம் செலவிடப்படும் வழக்கு நடவடிக்கைகளுக்காக சட்டதரணி ஒருவரை நியமிப்பதற்கு மற்றும் மாதாந்த படி ஒன்றினை வழங்குவதற்கும் பொது சபையில் முன்மொழிவுகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை யால் சட்டத்தரணியுடன் | மாதாந்த கட்டணம் ஒன்றினை செலுத்தி சட்டத்தரணி ஒருவரின் சேவையினை பெற்றுக்கொள்வதெனில் அவருக்கு வழக்கு நடவடிக்கைகளுக்கு மேலதிக கட்டணங்கள் செலுத்தப்படக்கூடாது. |

| | | |
|---|---|---|
| உடன்படிக்கை கைச்சாத்திரப்பட்டிருந்தது. பின்னர் 2021 ஜூலை முதல் 2022 டிசம்பர் வரையிலும் அவருக்கு ரூபாய்.425,000 தொகை மாதாந்த படியாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அதற்கு மேலதிகமாக அக்கால பகுதியில் சபையின் வழக்கு நடவடிக்கைகளுக்கு அவருக்கு மேலும் ரூபாய்.103,920 மற்றும் ஏனைய வழக்கறிஞர்களுக்கு ரூபாய்.578,627 செலுத்தப்பட்டிருந்தது. | உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதிக்கு முன்னர் அவரால் மற்றும் ஏனைய வழக்கறிஞர்களால் நடாத்தப்படும் வழக்குகளுக்கு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளமை. | |

**3.5 ஒப்பந்த நிர்வாகம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 03 கட்டுமானங்களில் ரூபாய்.70,622 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | ரூபாய்.28,942 தொகைக்கு பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. எஞ்சிய மேலதிகமாக செலுத்தல்களை மீள செலுத்துமாறு உரிய சங்கங்களுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளமை. | மேலதிகமான கொடுப்பனவுகள் அறவிடப்பட வேண்டும். |